திருப்பூர் தெற்குப் பிரிவு காவல் நிலையத்துக்குக் கட்டடம்.

*665 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. அது டிசம்பர் மாதம்தான் துவக்கப் பட்டது. புதிய காவல் நிலையத்திற்கு வாடகைக் கட்டடம் என்று இல்லாமல், சொந்தக் கட்டடம் கட்ட அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்மிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்குத் தேவையானது சுமார் 4 ஆயிரம் சதுர அடியாகும். இது குறித்து நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான செயற்குறிப்பு தயாரித்து அனுப்பும்படி கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, திட்டமும் மதிப்பீடுகளும் தயார் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Thefts

* 666 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state--

(*a*) the number of complaints of house breaking and theft received from residents of Todhunter Nagar during the period from April to July 1971; and

(*b*) the details thereof?

மாண்புபுமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) வீடுபுகுந்து களவாடியது குறித்த புகார் ஒன்று, தாதண்டர் நகரில் குடியிருப்பவர் ஒருவரால், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது.

(இ) குற்றஞ்சாட்டப்பட்ட காஞ்சீபுரத்தைச் சேர்ந்த தாமோதரன் பூட்டை உடைத்து வீட்டிற்குள் புகுந்து ரூ 200 மதிப்புள்ள எவர்சில்வர் பாத்திரங்களைத் திருடினார். அவர் கைது செய்யப்பட்டு, அப்பாத்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்டதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் தனது குடியிருப்பை அறிவிக்குமாறு கட்டளையிடப்பட்டார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, டீச்சர்ஸ் காலேஜுக்கு அருகில் உள்ள தாதண்டர் நகரில் சுமார் 300 குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு அதிகமாகக் குடியிருப்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான். அவர்கள் பகல் நேரத்தில் அலுவலகங்களுக்கு வந்து விடுகிறார்கள். அந்தக்

காலனிக்கு அருகில் ஒரு கள்ளுக்கடை இருப்பதால் எல்லோரும் குடித்து விட்டு அந்த ரோடு வழியாகப் போகிறார்கள். பகல் நேரங்களில்கூட இம் மாதிரியான திருட்டுகள் நடைபெறுகின்றன. அப்படி அயலார் நகருக்குள் வராத அளவிற்கு அந்தக் காலனியின் பின்பக்கமாகக் காம்பவுண்ட் வைத்து தக்க பாதுகாப்பு செய்து கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில், ஓராண்டுக் காலத்தில் இதுபோன்ற வீடுபுகுந்து திருடுதல் என்கின்ற இந்தக் குற்றங்கள் 7 நடைபெற்றுஇருக்கின்றன. அதில் 4 கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகளும் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். இரவில் இரண்டு ரோந்து காவலர்கள் போடப்பட்டு, இரவு 11 மணி முதல் விடியற்காலை 5 மணி வரையில் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் ரோந்து வருகிறார்கள். தாதண்டர் நகர் மாத்திரமல்ல. சென்னையில் 12 தொகுதிகளிலும் ரோந்து வேன்கள் கடந்த ஆண்டிலிருந்து புதிதாக விடப்பட்டு, அந்த ரோந்து வேன்களும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் காவல் துறையினர் இந்த விஷயங்களில் மிகவும் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனைகள் பரிசீலிக்கப்பட்டு, ஆவன செய்யப்படும்.

* 667 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a piece goods merchant was relieved of Rs. 10,000 on 23rd July 1971 in Tiruchirappalli; and

(*b*) if so, the steps taken to book the culprits?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளியில், துணி வியாபாரி ஒருவரிடம் பணி புரிந்து வந்த எழுத்தர் ஒருவரிடமிருந்து ரூ. 15,600 களவாடப்பட்டது.

(இ) உள்ளூர் காவலர்கள் புலனாய்வு செய்ததில், திருவெறும்பூரைச் சேர்ந்த ஒருவர் இத்திருட்டுக்குக் காரணமாயிருந்தார் என்று தெரியவந்தது. அவர் கைது செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி 1-வது துணை மாஜிஸ்ட்ரேட்டின் முன்பு குற்றப் பத்திரிகை ஒன்று பதிவு செய்யப்பட்டது. அவர் குற்றவாளிக்கு நான்கு மாதக் கடுஞ் சிறைத் தண்டனை விதித்தார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அந்தக் குமாஸ்தா கடையிலிருந்து வந்தபோது பட்டப் பகலிலே திருட்டு நடந்ததாகத் தெரிகிறது. அவர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டாரா ? குற்றவாளியிடமிருந்து எவ்வளவு ரூபாய் மீட்கப்பட்டது? அது பறிகொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருடியவர் வேறு மாநிலங்களுக்கு எல்லாம் ஓடினார். பிறகு கைது செய்யப்பட்டார். மொத்தப் பணம் 15,600 ரூபாயில் 11,025 ரூபாய் அவரிடமிருந்து மீட்கப்பட்டு, உரியவரிடம் கொடுக்கப்பட்டது.